# 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 24/2012)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Heritage Commission Act, 2012

## (Tamil Nadu Act No.24 of 2012)

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**


**தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.**

2023

# 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 24/2012)

பிரிவு — பொருளடக்கம்


**அத்தியாயம்–I**

**முன்னுரை**

1. குறுந்தலைப்பும் தொடக்கமும்.
2. பொருள்வரையறைகள்.

**அத்தியாயம்–II**

**தமிழ்நாடு பாரம்பரிய ஆணையத்தை அமைத்துருவாக்குதல்**

3. ஆணையத்தை அமைத்துருவாக்குதல்.
4. ஆணையத்தில் எவரெவர் அடங்கியிருப்பர்.
5. உறுப்பினர்களுக்கான தகுதிக்கேடு.
6. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் பணி நிபந்தனைகள்.
7. ஆணையத்தின் கூட்டங்கள்.
8. காலியிடங்கள் முதலானவை ஆணையத்தின் செயற்பாடுகளைச் செல்லத்தகாதவையாக ஆக்குதல் கூடாது.
9. குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஆணையத்துடன் நபர்கள் தற்காலிகமாக இணைந்து செயலாற்றுதல்.
10. ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர்களும்.

## அத்தியாயம்–III

## ஆணையத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும்.

11. ஆணையத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும்.

12. அரசுக்கு மேல் முறையீடு செய்தல்.

13. சீராய்வு.

14. விசாரணைகள் தொடர்பான அதிகாரம்.

15. மாநில அரசும் உள்ளாட்சி அதிகார அமைப்பும் ஆணையத்தின் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுதலும், அதற்கு இணங்கிய வகையில் நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

## அத்தியாயம்–IV

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

16. அரசால் வழங்கப்படும் மானியங்கள்.

17. ஆணையத்தின் நிதி.

18. ஆணையத்தின் வரவு செலவுத் திட்டம்.

19. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.

20. ஆண்டறிக்கை.

21. விவரஉரைகளும் தகவல்களும்.

## அத்தியாயம்–V

## பல்வகை

22. ஒப்படைவுகள்.

23. ஆணையத்தின் உறுப்பினர்களும். பணியாளர்களும் பொது ஊழியர் ஆவர்.

24. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

25. இச்சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி இருத்தல்.

26. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

27. ஒழுங்குவிதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

28. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

# 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 24/2012

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**இம்மாநிலத்தில் பாரம்பரிய ஆணையம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்கும், அதனோடு தொடர்புடைய மற்றும் அதன் விளைவான விவரங்களுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

தமிழ்நாடானது அதன் வளமான பாரம்பரியத் தன்மையையும் கலாச்சார மதிப்புகளையும் கொண்ட சொத்துக்களைப் பெற்றிருப்பது அனைவரும் அறிந்ததாகும். வருங்கால சந்ததியினருக்காக இவற்றை அனைத்து விதங்களிலும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்திக் கூறவேண்டிய தேவைஇல்லை என்பதாலும்;

மேலும் 1958ஆம் ஆண்டு தொன்மையான நினைவிடங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்விடங்கள் மற்றும் எஞ்சிய நினைவுச்சின்னங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 24/1958) படி மற்றும் 1966ஆம் ஆண்டு தமிழ்நாடு தொன்மையான நினைவிடங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்விடங்கள் மற்றும் எஞ்சிய நினைவுச்சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1966) படி உள்ளடங்காத கட்டிடங்களை அல்லது வளாகங்களைப் பாதுகாப்பது தேவையானதாக இருக்கிறது என்பதாலும்;

பாரம்பரிய கட்டிடத்தை அடையாளம் காண்பது, அவற்றை மறுபடியும் மறுசீரமைப்பது, பேணிக்காத்தல் தொடர்பான விவரங்களிலும் மற்றும் பாரம்பரிய கட்டிடம் எதனையும் பெரும்பாலும் பாதிக்கக்கூடிய மேம்பாடு மற்றும் பொறியியல் செயல்பாடுகள் தொடர்பான விவரங்களிலும் ஆலோசனைகள் வழங்குவதற்கு சட்டமுறையான

அதிகாரஅமைப்பு ஒன்றை அமைத்துருவாக்குவது தேவையானதாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

## அத்தியாயம் – I

## முன்னுரை

1. **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**– (1) இந்தச் சட்டம் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.**– இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "கட்டிடம்" என்பது, உண்மையிலேயே பயன்பாட்டில் இருக்கும் அல்லது இல்லாத குடியிருப்பு, தொழில், வணிகம், கலாச்சாரம் அல்லது பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக் கருதப்படும் கட்டுமானம் அல்லது நிலைநிறுத்தப்பட்ட கட்டமைப்பு அல்லது கட்டுமானத்தின் அல்லது நிலைநிறுத்தப்பட்ட கட்டமைப்பின் பகுதியை உள்ளடக்கும்;

(b) "கட்டிடச் செயல்பாடுகள்" என்பது, கட்டிடங்களைக் கட்டுவதோடு தொடர்புடைய கட்டிடங்களை மீண்டும் கட்டும் செயல்பாடுகள், கட்டிடங்களின் கட்டமைப்புகளை மாற்றியமைத்தல் அல்லது கட்டிடங்களுக்கு மேலும் பகுதிகளைச் சேர்த்தல் அல்லது இயல்பாக மேற்கொள்ளப்படும் பிற செயல்பாடுகளை உள்ளடக்கும்;

(c) "தலைவர்" என்பது, இந்த ஆணையத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

(d) "ஆணையம்" என்பது, பிரிவு 3இன்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு பாரம்பரிய ஆணையம் எனப் பொருள்படும்;

(e) "மேம்பாடு" என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடன், கட்டிடத்தை கட்டுவது, பொறியியல் செயற்பாடுகள், சுரங்கம் வெட்டுவது அல்லது நிலத்தின் உள்ளே அல்லது மேலே அல்லது கீழே செய்யப்படும் பிற செயல்பாடுகள் அல்லது கட்டிடம் அல்லது நிலம் எதிலும் முக்கியமான மாற்றம் எதனையும் செய்தல் எனப் பொருள்படும் மற்றும் மறுமேம்பாட்டையும் உள்ளடக்கும்;

(f) "பொறியியல் சார்ந்த செயல்பாடுகள்" என்பது, சாலையை அணுகுவதற்கான வழியை உருவாக்குதல் அல்லது அமைத்தல் அல்லது குடிநீர் வழங்குதல் அல்லது கழிவுநீரை அகற்றுதல் ஆகியவற்றிற்கு வழிசெய்தல் என்பதை உள்ளடக்கும்;

(g) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(h) "பாரம்பரியமிக்க கட்டிடம்" என்பது, வரலாறு, கட்டிடக்கலை, சுற்றுச்சூழல் அல்லது கலாச்சார முக்கியத்துவம் காரணமாக பேணிப் பாதுகாப்பதானது தேவையானதாக இருக்கின்ற கட்டிடம் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வளாகங்கள் அல்லது அதன் பகுதி எதுவும் எனப் பொருள்படும் மற்றும் அதில் வேலி அமைப்பதற்கோ அல்லது மூடுவதற்கோ அல்லது பிறவாறு அத்தகைய கட்டிடத்தை பாதுகாப்பதற்கோ தேவைப்படக்கூடிய அத்தகைய கட்டிடத்தின் அருகில் அமைந்த நிலத்தின் பகுதியையோ அல்லது அதன் பகுதி எதையுமோ உள்ளடக்கும்; மேலும் மேற்சொன்ன நோக்கத்திற்காகப் பேணிப் பாதுகாப்பதற்காகத் தேவைப்படும் பரப்பிடங்களையும் கட்டிடங்களையும் இது உள்ளடக்கும்;

(i) "உள்ளாட்சி அதிகாரஅமைப்பு" என்பது, அப்போதைக்கு நடைமுறையில் உள்ள தொடர்புடைய

சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்படவிருக்கிற மாநகராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சி எனப் பொருள்படும்;

(j) "உறுப்பினர்" என்பது, ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர் எனப் பொருள்படும்;

(k) "பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவிடங்கள்" என்பது, அதன் பாரம்பரியத்துடன் கூடிய தொடர்பின் காரணமாக அழிந்து போதல், சீர்குலைந்து போதல், மாறிப்போதல், சிதைந்து போதல், உருக்குலைந்து போதல், அகற்றுதல், சிதிலமடைத்தல் அல்லது அழிந்து கொண்டே போதல் என்ற நிலையிலிருந்து தடுத்துப் பாதுகாப்பது தேவையானது என அரசு கருதுகிற கட்டிடம், கட்டமைப்பு, நிலை நிறுத்தப்பட்ட கட்டமைப்பு, ஒற்றைக்கல் அமைப்பு, நினைவிடம், மண்மேடு, புதைகுழிமேடுகள், கல்லறை/சமாதி, குகை, கற்சிலை, அசையாத ஒரு பொருளின் மீது அல்லது அதன் பகுதி எதனின்மீது எஞ்சியிருக்கும் அதன் பகுதியில் காணப்படும் கல்வெட்டு எழுத்துகள் அல்லது ஆய்விடம் எதுவும் எனப் பொருள்படும்;

(l) "அறிவிக்கை" என்பது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை ஒன்று எனப் பொருள்படும்;

(m) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(n) "மக்கள் நல வசதி" என்பது, அரசானது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கான ஒரு பொதுநல வசதி என்பதாக தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலமாக குறிப்பிடப்படும் சாலை, குடிநீர் வழங்குதல், சாலை விளக்குகள், திடக்கழிவை அகற்றுதல், கழிவுநீர் வடிகால், பொதுப்பணிகள் அல்லது அதுபோன்ற பிற வசதிகளை உள்ளடக்கும்;

(o) "ஒழுங்குவிதி" என்பது, ஆணையத்தால் செய்யப்பட்ட ஒழுங்குவிதி ஒன்று எனப் பொருள்படும்;

(p) "விதிகள்" என்பது, இந்தச் சட்டத்தின்படி அரசினால் செய்யப்படும் விதிகள் எனப் பொருள்படும்;

## அத்தியாயம்–II

## தமிழ்நாடு பாரம்பரிய ஆணையத்தை அமைத்துருவாக்குதல்

3. **ஆணையத்தை அமைத்துருவாக்குதல்.–** (1) அரசானது, தமிழ்நாடு பாரம்பரிய ஆணையம் என்றழைக்கப்படும் அமைப்பு ஒன்றை அறிவிக்கையின் வாயிலாக அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) இந்த ஆணையமானது ஒரு கூட்டமைப்பாக இருக்கும் என்பதோடு நிலையான தொடருரிமையையும், பொது இலச்சினையையும் பெற்றிருத்தல் வேண்டும். சொத்துக்களைப் பெறவும் வைத்திருக்கவும் அவற்றை தீர்வு செய்வதற்குமான அதிகாரத்தையும் ஒப்பந்தம் செய்வற்கான அதிகாரத்தையும் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன பெயரில் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

4. **ஆணையத்தில் எவரெவர் அடங்கியிருப்பர்.–** (1) ஆணையமானது, அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய பாரம்பரியமிக்க கலாச்சாரங்களைப் பேணுவதில் அக்கறை கொண்டவராகவும், முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுபவராகவும் உள்ள புகழ்வாய்ந்த நபர் ஒருவரின் தலைமையில் அமைதல் வேண்டும் மற்றும் பதினாறுக்கு மேற்படாத பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(a) சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவி வழி;

(b) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(c) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(d) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(e) சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(f) சென்னை அருங்காட்சியகத்தின் ஆணையர், பதவி வழி;

(g) சென்னை வட்ட இந்திய தொல்லியல் துறையின் கண்காணிப்பு தொல்லியலாளர், பதவி வழி;

(h) தொல்லியல் துறை ஆணையர், சென்னை, பதவி வழி;

(i) அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளிக்கல்வி இயக்குநர், பதவி வழி;

(j) இயக்குநர், சுற்றுச்சூழல், பதவி வழி;

(k) தலைமைப் பொறியாளர், (கட்டிடங்கள்) பொதுப்பணித்துறை, சென்னை, பதவி வழி;

(l) முதுநிலை கட்டிடக்கலை நிபுணர், பொதுப்பணித்துறை, சென்னை, பதவி வழி;

(m) தொல்லியலில் நன்கு தேர்ச்சிபெற்ற, அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் நபர் ஒருவர்;

(n) [1][***]

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையத் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 7/2017) பிரிவு 2ஆல் விட்டுவிடப்பட்டது.

(o) பாரம்பரிய மேலாண்மை மற்றும் பண்பாட்டு அலுவல்களில் ஈடுபட்டுள்ள அரசு சாரா நிறுவனங்கள் எதிலிருந்தும் அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் நபர் ஒருவர்;

(p) தமிழ்நாடு மண்டலத்தில் உள்ள நகர திட்டமிடல் (இந்தியா) நிறுவனத்தின் நியமனதாரர் ஒருவர்.

(2) அரசானது, ஆணையத்துடன் கலந்தாய்வு செய்து ஆணையத்தின் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்; அவர் வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்:

**வரம்புரை**: செயலாளரின் முதல் நியமனமானது ஆணையத்தைக் கலந்தாய்வு செய்யாமலே அரசினால் செய்யப்படலாம்.

(3) செயலாளரின் பணி குறித்த வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

5. **உறுப்பினர்களுக்கான தகுதிக்கேடு**.– நபர் எவரும்:–

(a) மனச்சீர்கேடுற்றவராக இருப்பாரானால்;

(b) நொடிப்புநிலையர் ஒருவராக நீதிமுறையில் தீர்மானிக்கப்பட வேண்டி விண்ணப்பித்துக் கொண்டுள்ள ஒருவராக அல்லது விடுவிக்கப்படாத நொடிப்புநிலையர் ஒருவராக இருப்பாரானால்;

(c) சட்டம் எதன்படியேனும் சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கத்தக்க ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச்செயல் எதற்காகவும், தண்டனை விதிக்கப்பட்டவராக இருப்பாரானால், அந்தத் தண்டனையானது நீக்கப்படாமல் இருந்தால் மற்றும் அந்தத் தண்டனை முடிவுற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் என்பதான காலஅளவானது முடிவுறாமல் இருந்தால்;

(d) அவர் ஆணையத்தின் சம்பளம் பெறும் அலுவலராக அல்லது பணியாளராக இருப்பாரானால்; அல்லது

(e) அவர் அரசினால் வகுத்துரைக்கப்படும் பிற தகுதிக்கேடுகளுக்கு உள்ளாவாரானால்,

ஆணையத்தின் தலைவராகவோ அல்லது உறுப்பினர் ஒருவராகவோ நியமிக்கப்படுவதற்குத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

6. **தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் பணிநிபந்தனைகள்.–** (1) ஆணையத்தின் தலைவரும், உறுப்பினர் ஒவ்வொருவரும் மூன்றாண்டு காலஅளவிற்குப் பதவி வகிப்பர் மற்றும் மேலும் மூன்றாண்டு காலஅளவிற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதி உடையவராவர்.

(2) தலைவர் அல்லது உறுப்பினர் அரசிற்கு முகவரியிட்டு, தாம் கைப்பட எழுதுவதன் மூலமாக தலைவர் அல்லது நிகழ்விற்கேற்ப உறுப்பினர் பதவியிலிருந்து விலகலாம்; ஆனால் அவர்தம் பதவி விலகலானது அரசினால் ஏற்கப்படும் வரையில் அவர் பதவியில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(3) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும் மற்றும் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் வீதத்தில் இருத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், அரசானது,

(a) அவர், தீர்க்கப்படாத நொடிப்புநிலையராக இருக்கிறவரானால்;

(b) அவர், அரசின் கருத்தில், ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றவாளியாகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளவராக இருப்பாரானால்;

(c) அவர், மனச்சீர்கேடுற்றவராகி, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்பப்பட்டு இருப்பாரானால்;

(d) அவர், செயல்பட மறுப்பாரானால் அல்லது செயல்படத் திறனற்றுப் போவாரானால்;

(e) அவர், ஆணையத்தின் அனுமதி இல்லாமல் தொடர்ந்தாற்போல் அதன் மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பாரானால்;

(f) அரசின் கருத்தில், அவர், தம் தலைவர் அல்லது நிகழ்விற்கேற்ப, உறுப்பினர் பதவியை, அந்த நபர் பதவியில் தொடர்ந்திருப்பது பொதுமக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் என்ற வகையில் தவறாகப் பயன்படுத்தி இருப்பாரானால்,

அவரை தலைவர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல் வேண்டும்:

**வரம்புரை:** இந்த உட்பிரிவின்படி, அந்த விவரத்தில் உறுப்பினர் எவருக்கும், அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்படும் வரையில் அந்த உறுப்பினர் எவரும் பதவியிலிருந்து நீக்கப்படுதல் கூடாது.

(5) உட்பிரிவு (2)இன்படியோ அல்லது உட்பிரிவு (5)இன்படியோ அல்லது மற்றபடியோ ஏற்பட்ட காலியிடம் ஒன்று அரசினால் புதிதாக பெயர் குறித்து நியமிப்பதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் எவருடைய காலியிடத்தில் அவர் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்டாரோ, காலியிடம் ஏற்படாது இருந்தால், அந்த நபர் வகித்திருக்கக் கூடிய எஞ்சிய கால அளவிற்கு, அவர் பதவி வகித்தல் வேண்டும்:

**வரம்புரை:** அந்தத் தலைவர் நீங்கலாக பிற உறுப்பினர்களின் காலியிடம் ஒன்று, அந்த உறுப்பினரின் பதவிக்காலம் எந்தத் தேதியில் முடிவடைகின்றதோ அந்தத்

தேதிக்கு முந்திய ஆறு மாதங்களுக்குள் ஏற்படுமானால் அத்தகைய காலியிடமானது நிரப்பப்படுதல் கூடாது.

விளக்கம்.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "உறுப்பினர்" என்பது, பதவிவழி உறுப்பினரையும் "செயலாளரையும்" உள்ளடக்காது.

7. **ஆணையத்தின் கூட்டங்கள்.–** ஆணையமானது, தேவைப்படும் போதெல்லாம், ஒழுங்குவிதிகளில் வகைசெய்யப்பட்ட அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நடைமுறைவிதிகளைக் கடைபிடித்தல் வேண்டும்:

**வரம்புரை**: ஆணையமானது குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடுதல் வேண்டும்.

8. **காலியிடங்கள் முதலானவை ஆணையத்தின் செயற்பாடுகளைச் செல்லத்தகாதவையாக ஆக்குதல் கூடாது.–** ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் வினவப்படுதல் கூடாது; காலியிடம் ஏதேனும் இருக்கின்ற காரணத்தினால் மட்டுமே அல்லது ஆணையத்தை அமைத்துருவாக்குவதில் குறைபாடு இருக்கிறது அல்லது தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவராக செயல்படுகிற நபர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு இருக்கிறது அல்லது பொருளின் தகுதிகளைப் பாதிக்காத வகையில் கூட்டம் ஒன்றினை நடத்துவதற்கான அறிவிப்பினை வெளியிடுவது உள்ளிட்ட, ஆணையத்தின் நடைமுறையில் முறைகேடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே செல்லத்தகாததாக ஆக்கப்படுதல் கூடாது.

9. **குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஆணையத்துடன் நபர்கள் தற்காலிகமாக இணைந்து செயலாற்றுதல்.–** (1) ஆணையமானது ஒழுங்குவிதிகளால் தீர்மானிக்கப் படக்கூடிய முறையிலும் அத்தகைய நோக்கங்களுக்காகவும், அது உதவி அல்லது ஆலோசனை பெற விரும்பும் நபர் எவருடனும் தாமே இணைந்து செயல்படலாம்.

(2) நோக்கம் எதற்காகவும் இணைந்து செயல்படும் நபர் ஒருவர், அந்த நோக்கத்துடன் தொடர்புடைய கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான உரிமை உண்டு; ஆனால் ஆணையத்தின் கூட்டம் ஒன்றில் வாக்களிப்பதற்கான உரிமை அந்த நபருக்கு இல்லை.

**10. ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர்களும்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின்படி, ஆணையத்தின் அலுவற்பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய அலுவலர்களையும் பணியாளர்களையும் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்களும் படித்தொகைகளும் மற்றும் பிற பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்களும் பணியாளர்களும் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருதல் வேண்டும்.

(4) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும், முடிவுகளும், பிற முறைஆவணங்களும், ஆணையத்தின் செயலாளர் அல்லது இது குறித்து உரிய முறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆணையத்தின் பிற அலுவலர்கள் எவராலும் இடப்படும் கையொப்பத்தின் மூலம் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்–III

## ஆணையத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும்

**11.ஆணையத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும்.–** (1) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் யாவும், பாரம்பரிய கட்டிடம் எதனையும்

அடையாளம் காண்பது, மறு சீரமைப்பது, பேணிப் பாதுகாப்பது தொடர்பான எதனையோ அல்லது பாரம்பரிய கட்டிடம் எதனையும் பேணிப் பாதுகாப்பதை பெரும்பாலும் பாதிக்கிற பிற மேம்பாடு அல்லது பொறியியல் நடவடிக்கை எதனையோ ஆணையத்தின் ஆலோசனைக்காகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஆணையத்தின் செயற்பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:–

(a) தற்போது இருந்துவரும் கட்டிடங்களின் பட்டியலில் கட்டிடங்களை சேர்த்தல் உள்ளிட்டு, பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் கருத்துருக்களை கூர்ந்தாய்வு செய்த பின்பு, பாரம்பரிய கட்டிடங்களின் குறித்தசில தரநிலைகளில் கட்டிடங்களின் வகைப்பட்டியலை தயாரித்தலோடு மேலும் பாரம்பரிய பாதுகாப்பு தொடர்பான பிற அனைத்து விவரங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(b) பாரம்பரிய கட்டிடம் எதனையும் மேம்படுத்துவதற்காக, கட்டுப்பாடு செய்வதற்காக மற்றும் பேணிக் காப்பதற்காக அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதையும் திருத்தம் அல்லது மாறுதல் அல்லது தளர்வு செய்தல் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(c) பாரம்பரிய கட்டிடங்களை வணிக அல்லது பிற பயன்பாட்டிற்காக அனுமதிக்கலாமா என்பது குறித்தும் மற்றும் அனுமதிக்கலாம் என்றால் அத்தகைய பயன்பாட்டினை எப்போது தடைசெய்யலாம் என்பது குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(d) அரசினால் பட்டியலிடப்படக்கூடிய பாரம்பரிய கட்டிடங்களுக்காக தனி ஒழுங்குவிதிகளை அமைப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(e) அழகுபடுத்துவதற்கான திட்டங்களுக்கு உதவி செய்கிற இம்மாநிலத்தில் உள்ள தனியார் தரப்பினரால் ஏற்கப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(f) பாரம்பரிய கட்டிடம் ஒன்றை உருக்குலைக்கும் அல்லது அழிக்கும் செயற்பாடுகளுக்குத் தண்டனை நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(g) பாரம்பரிய கட்டிடங்களை மறுசீரமைப்பதற்கான வகைமுறைகளைச் செய்வது குறித்து அரசுக்கும் உள்ளாட்சி அதிகார அமைப்புகளுக்கும் ஆலோசனை வழங்குதல்;

(h) பாரம்பரிய கட்டிடங்களின் பதிவுருக்களை ஆவணப்படுத்துவது குறித்து அரசுக்கும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளுக்கும் ஆலோசனை வழங்குதல்;

(i) மேம்படுத்தும் வகையில், பாரம்பரியத்தை பேணிப் பாதுகாப்பது அல்லது பராமரிப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி, வெளிப்படையாக தெரியக்கூடிய கட்டிடக்கலை மற்றும் இயற்கைச் சான்றுகள் குறித்த உரிமை உணர்வுகளை உருவாக்குவதற்காக, பாரம்பரியத்தை பேணிக்காப்பதற்காக பரவலாக பொதுமக்களை ஈடுபடுத்துவதற்கு முன்எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(j) பாரம்பரிய கட்டிடம் எதனையும் மேம்படுத்துவதற்கான உரிமைச் சான்றிதழ் எதனையும் வழங்குவதற்கான கொள்கை குறித்து, தேவைப்படும் போது, உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(k) பாரம்பரிய கட்டிடங்களைப் பொறுத்த அளவில், விளம்பரங்களை நிறுவுவதையும் காட்சிக்

கட்டமைப்புகளை பார்வைக்கு வைப்பதையும் முறைப்படுத்துவதற்கு உள்ளாட்சி அதிகார அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(l) பாரம்பரிய கட்டிடங்களை பழுது பார்ப்பதற்கான செலவுகள் குறித்தும் தனியார் மூலங்களிலிருந்து பழுதுபார்த்தல் நிதியைத் திரட்டுவதற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கைகள் குறித்தும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(m) பாரம்பரிய கட்டிடங்களின் உயரத்தையும் முக்கியமான கூறுகளையும் கட்டுப்படுத்தி தனித்துவம் வாய்ந்த வடிவமைப்புகளையும் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளையும் தயாரிப்பது குறித்தும், பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல் தொடர்பான பிற பொருட்கள் குறித்தும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(n) பாரம்பரிய கட்டிடங்களுக்கான தண்ணீர் விநியோக கட்டண–வீதங்கள், வரிகள், கட்டணங்கள் அல்லது பிற கட்டணம் எதனையும் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதன் மூலம் ஊக்குவித்தல் குறித்து உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(o) அரசினால் ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை மறுசீரமைத்தல் அல்லது பேணிப் பாதுகாத்தல் தொடர்பான பிற விவரம் எதனையும் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

(3) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதுவும் ஆணையத்தின் தீர்மானம் அல்லது ஆலோசனைக்கு இணங்கியவாறு அல்லாமல் பாரம்பரிய கட்டிடம் எதனையும் அடையாளம் காணுவதற்கு, பேணிக்காப்பதற்கு, பாதுகாப்பதற்கு அல்லது

மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதையும் எடுத்தல் கூடாது.

**12. அரசுக்கு மேல்முறையீடு செய்தல்.–** பிரிவு 11இன் உட்பிரிவு (1)இன்படி ஆணையத்திற்கு குறிப்பிடப்பட்ட கட்டிட செயல்பாடு, பொறியியல் செயல்பாடு அல்லது மேம்பாட்டுக் கருத்துரு எதனையும் பொறுத்தளவில் ஆணையத்தின் அறிவுரை எதனாலும், உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதுவும் குறையுறுமானால் அத்தகைய உள்ளாட்சி அமைப்பானது, ஆணையத்தினால் அறிவுரை செய்யப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக மாநில அரசிடம் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்; மற்றும் மாநில அரசானது, அதன்மீது அதுத் தக்கதென கருதும் ஆணையினைப் பிறப்பிக்கலாம்.

**13. சீராய்வு.–** (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், பிரிவு 11இன் உட்பிரிவு (1)இன்படி ஆணையத்தால் அறிவுரை வழங்கப்பட்ட நிகழ்வு எதிலும், அவ்வாறு செய்வது, பொதுமக்கள் நலனுக்கு தேவையானதென அரசு கருதுமானால், அது தாமாகவே முன்வந்து, விளக்கம் கேட்பதற்கும் விசாரணைக்கு அழைப்பதற்கும், அது பொருத்தம் எனக் கருதும் ஆணையை பிறப்பிப்பதற்கும் அரசைத் தடைசெய்தல் கூடாது:

**வரம்புரை**: முறையீடு ஒன்றைச் செய்வதற்கு வாய்ப்பு ஒன்றினை வழங்கினாலன்றி உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதனையும் பாதிக்கின்ற வகையில் இந்தப் விவரம் குறித்து ஆணை எதனையும் பிறப்பித்தல் கூடாது.

(2) பிரிவு 12இன்படியான மேல்முறையீடு ஒன்றில் அல்லது இந்தப்பிரிவின்படியான சீராய்வு ஒன்றில் அரசினால் எடுக்கப்படும் முடிவானது இறுதியாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும் மற்றும் அது நீதிமன்றம் எதிலும் வினவப்படுதல் கூடாது.

**14. விசாரணைகள் தொடர்பான அதிகாரம்.–** பின்வரும் விவரங்களைப் பொறுத்த அளவில், இந்தச் சட்டத்தின்

படியான விவரம் எதனையும் விசாரணை செய்யும்போது ஆணையமானது 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமைவழக்கு ஒன்றை விசாரணை செய்யும்போது உரிமையியல் நீதிமன்றம் கொண்டுள்ள அதிகாரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்:–

(a) நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து, அவரின் வருகையை வலியுறுத்தி அவரை விசாரித்தல்;

(b) ஆவணம் எதையும் கண்டறிந்து தாக்கல் செய்யக் கோருதல்;

(c) ஆணையுறுதி ஆவணங்களின் பேரில் சாட்சியம் பெறுதல்;

(d) அலுவலகம் எதிலிருந்தும் பொதுப்பதிவுரு அல்லது அதன் நகல்கள் எதனையும் கோரிப் பெறுதல்;

(e) வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்.

15. **மாநில அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்பும் ஆணையத்தின் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுதலும் அதற்கிணங்கிய வகையில் நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.–** (1) இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளுக்கு உட்பட்டு அரசும் உள்ளாட்சி அதிகார அமைப்பு ஒவ்வொன்றும், அரசுக்கு அல்லது நிகழ்விற்கேற்ப அந்த உள்ளாட்சிஅமைப்புக்கு ஆணையம் வழங்குகின்ற அறிவுரை ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய அறிவுரையை உடனடியாகவும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(2) அரசானது, உட்பிரிவு (1)இன் நோக்கங்களுக்காக, உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒன்றிற்கு அது தக்கதெனக் கருதக்கூடிய பணிப்பாணைகளை வழங்கலாம்; மற்றும் அதன்பேரில் அத்தகைய உள்ளாட்சி

அதிகாரஅமைப்பானது மேற்சொன்ன பணிப்பாணைகளுக்கு இணங்கிய வகையில் செயல்படுதல் வேண்டும்.

**அத்தியாயம் –IV**

**நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை**

**16. அரசால் வழங்கப்படும் மானியங்கள்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அரசு பொருத்தமெனக் கருதுகிற பணத்தொகைகளை மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையம் இந்தச் சட்டத்தின்படியான அலுவற்பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதுகிற தொகைகளைச் செலவு செய்யலாம்.

(3) தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க மதிப்பூதியமும், படித்தொகைகளும், பிரிவு 10இல் குறிப்பிடப்பட்ட செயலாளர், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளிட்ட நிர்வாகச் செலவினங்களும் உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட மானியங்களில் இருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

**17. ஆணையத்தின் நிதி.–** (1) ஆணையமானது, அதன் சொந்த நிதியைப் பெற்றிருத்தல் வேண்டும்; மற்றும் அரசினால் அவ்வப்போது அதற்கு வழங்கப்படக்கூடிய அனைத்து தொகைகளும், மைய அரசு அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும் அல்லது நபர் எவரும் ஆணையத்திடம் ஒப்படைக்கும் தொகை எதுவும் உள்ளிட்ட ஆணையத்தின் அனைத்து வரவுகளும் அத்தகைய நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணையத்தினால் செய்யப்படும் அனைத்துச்

செலவினங்களும் மேற்சொன்ன நிதியிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும். அத்தகைய செலவினம் செய்யப்பட்டதற்குப் பின்னர் மீதமாக உள்ள எஞ்சிய தொகையானது வகுத்துரைக்கப்படும் முறையில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) நிதியில் உள்ள பணம் அனைத்தும், மாநில அரசின் ஏற்பளிப்பிற்கு உட்பட்டு ஆணையத்தால் முடிவு செய்யப்படக்கூடிய வங்கியில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது அத்தகைய முறையில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஆணையமானது, இந்தச் சட்டத்தின்படியான அதன் அலுவல்களை ஆற்றுவதற்கு அது தக்கதெனக் கருதும் தொகைகளை செலவு செய்யலாம்; மற்றும் அத்தகைய தொகைகள் ஆணையத்தின் நிதியிலிருந்து செலுத்தப்படும் செலவினமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**18. ஆணையத்தின் வரவு செலவுத் திட்டம்.–** ஆணையமானது, வகுத்துரைக்கப்படும் வடிவத்திலும் நேரத்திலும் மதிப்பிடப்பட்ட வரவு செலவுகளை காட்டுகிற அடுத்த நிதியாண்டினை பொறுத்த அளவிலான வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் வேண்டும் மற்றும் அதன் நகலினை அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

**19. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.–** (1) ஆணையத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படும் முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையம், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவரஅறிக்கை ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(2) அரசால் இதன்பொருட்டு நியமிக்கப்படும் தணிக்கையாளரால், ஆணையத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கை நோக்கங்களுக்காக உட்பிரிவு (2)இன்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்,

வகுத்துரைக்கப்படும் விதத்தில் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரஉரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணையத்தின் செயலாளர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைப்பதற்கும், அத்தகைய அறிக்கையை ஆணையத்தின் அடுத்தக் கூட்டத்தில் அதன் பரிசீலனைக்காக, ஆணையத்தின் முன் வைப்பதற்கும் ஆவன செய்தல் வேண்டும்.

(5) தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்படும் குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனே களைவதற்கு, ஆணையம் உரிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட ஆணையத்தின் கணக்குகளானவை, தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன்மீது வழங்கும் குறிப்புகளுடனும், வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(7) தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும் தெரிவிக்கப்பட்டிருக்குமானால், எழுத்துவடிவிலான ஆணை மூலமாக, அதில் குறிப்பிடப்பட்ட காலஅளவிற்குள், அக்குறைபாடுகளைக் களைவதற்கு அந்த ஆணையில் குறிப்பிடப்படும் நடவடிக்கையை எடுக்குமாறு அரசானது ஆணையத்தைப் பணிக்கலாம் மற்றும் அதன்பேரில் ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

20. **ஆண்டறிக்கை.–** ஆணையமானது எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிற்கு பின்பும், முந்தைய ஆண்டின்போதான தனது நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களைத் தருகின்ற ஆண்டறிக்கை ஒன்றை வகுத்துரைக்கப்படும் தேதிக்கு முன்பாகவும் வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் தயாரித்து அரசுக்குப்

பணிந்தனுப்புதல் வேண்டும். மேலும் அந்த அறிக்கையானது, அடுத்த நிதியாண்டில் ஆணையத்தால் பெரும்பாலும் மேற்கொள்ளப்பட இருக்கின்ற நடவடிக்கைகள் எவையேனுமிருந்தால், அவற்றைப் பற்றிய விவரங்களையும் தருதல் வேண்டும். அரசானது, அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றும் வரப்பெற்ற பின்பு கூடியவிரைவில் சட்டமன்றப்பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

21. **விவர உரைகளும் தகவல்களும்.–** ஆணையமானது, அதன் நிதியை அல்லது செயல்பாடுகளைப் பொறுத்த அளவிலான அத்தகைய விவர உரைகளை அல்லது தகவல்களை அரசு அவ்வப்போது கோரும் விதத்தில் அரசுக்கு வழங்குதல் வேண்டும்.

## அத்தியாயம் – V

## பல்வகை

22. **ஒப்படைவுகள்.–** ஆணையமானது பொது அல்லது தனி ஆணையின் வாயிலாக ஆணையத்தின் தலைவருக்கு அல்லது அதன் உறுப்பினர் அல்லது அதன் அலுவலர் எவருக்கும் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அது தேவையெனக் கருதக்கூடிய அதன் அதிகாரங்கள் அல்லது அலுவல்கள் எவற்றையும் ஒப்படைவு செய்யலாம்.

23. **ஆணையத்தின் உறுப்பினர்களும் பணியாளர்களும் பொது ஊழியர் ஆவர்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதனின்படியும் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குவிதி அல்லது ஆணை அல்லது பணிப்பாணை எதனின்படியும் செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் பிற பணியாளர்கள் இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின்

பிரிவு 21இன் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**24. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தை அல்லது இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குவிதி, ஆணை, அல்லது பணிப்புரை எதையும் தொடர்ந்து நல்லெண்ணத்தில் செய்யப்படும் அல்லது செய்யக் கருதப்படும் செயல் எதனைப் பொறுத்தும் ஆணையத்தின் உறுப்பினர் எவருக்கும் எதிராக அல்லது அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்பாணையின்படி செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**25. இச்சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி இருத்தல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் முரணாக என்ன அடங்கி இருந்த போதிலும் செயல் விளைவு கொள்ளுதல் வேண்டும்.

**26. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசானது இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதையுமோ நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் விவரங்கள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகைசெய்யலாம்; அதாவது:–

(a) ஆணையத்தின் உறுப்பினர்களின் சம்பளங்கள் ஏதேனும் இருப்பின், படித்தொகைகள் மற்றும் பணி பற்றிய பிற வரையறைகளும் நிபந்தனைகளும்;

(b) ஆணையத்தின் செயலாளரின் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும்;

(c) பிரிவு 11இன் உட்பிரிவு (2)இன் (a) எனும் கூறின்படி ஆணையமானது அரசுக்கு எந்த விவரங்கள் பொருத்த அளவில் ஆலோசனையை வழங்கலாம் என்பதும்;

(d) ஆணையத்தின் வரவு செலவுத் திட்டமும் ஆண்டறிக்கையும் எந்தப் படிவத்தில் மற்றும் எந்தக் காலஅளவுகளுக்கு உள்ளாக தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்படலாம் என்பதும்;

(e) ஆணையத்தின் கணக்குகள் எந்தப் படிவத்திலும் எந்த முறையிலும் பேணி வரப்படலாம் என்பதும், எந்தக் காலத்தில் மற்றும் எந்த முறையில் அத்தகைய கணக்குகள் தணிக்கை செய்யப்படலாம் என்பதும்;

(f) அரசுக்கு வழங்குமாறு ஆணையமானது கோரப்படக்கூடிய விவர உரைகளும் தகவல்களும்;

(g) கட்டிடக்கலைப் போட்டி ஒன்றின் விளைவாக வடிவமைக்கப்பட்ட கட்டிடம், கட்டிடச் செயல்பாடு அல்லது பொறியியல் செயல்பாடானது எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு விலக்களிக்கப்படலாம் என்பதும்;

(h) இந்தச் சட்டத்தின்படி வகுத்துரைக்கப்படும் அல்லது வகுத்துரைக்கக் கோரப்படும் பிற விவரம் எதுவும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாக சொல்லப்பட்டாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் குறிப்பிட்ட நாளில்

நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாக சொல்லப்பட்டாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை அல்லது பணிப்பாணை அல்லது பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடியவிரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அதை அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது பணிப்பாணை அல்லது ஆணை எதையும் அச்சட்டமன்றப் பேரவை மாற்றியமைக்குமானால் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது பணிப்பாணையோ அல்லது ஆணையோ செய்யப்படவோ பிறப்பிக்கப்படவோ கூடாது என்று அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன்பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது பணிப்பாணையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும், அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல்வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லு தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**27. ஒழுங்குவிதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** ஆணையமானது, அரசினால் செய்யப்படும் விதிகள் எவற்றுக்கும் உட்பட்டும் அரசின் முன் ஒப்புதலுடனும், இந்தச் சட்டத்தின்படி இந்த ஆணையத்திற்குள்ள அதிகாரங்களை மற்றும் அலுவல்களை நிறைவேற்றுவதற்காக ஒழுங்குவிதிகளைச் செய்யலாம்.

**28. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணையின் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ, அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறையைச் செய்யலாம்:

**வரம்புரை**: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டு காலம் முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.